பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

18. 12 .2024 7. 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. ஏழை மக்களின் நலனுக்கான திட்டங்களை வகுப்பதிலும், நாட்டை கட்டமைப்பதிலும் அரசியல் சாசனத்தின் பங்கு முக்கியமானது என்று உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
2. நாட்டின் கடலோர பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான திட்டங்களை மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வரவதாக உள்துறை இணை அமைச்சர் திரு நித்யானந்த ராய் தெரிவித்துள்ளார்.
3. இந்தியா உட்பட 39 நாடுகள் இலங்கைக்கு விசா இல்லாமல் பயணம் செய்யலாம் என அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு விஜிதா கொராத் தெரிவித்துள்ளார்.
4. காஸாவில் நடைபெற்று வரும் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தை தீவிரமாக நடைபெற்று வருவதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.
5. சர்வதேச பேட்மிண்டன் தர வரிசைப் பட்டியலில் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Treesa jolly –** காயத்ரி கோபிச்சந்த இணை 11-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

அரசியல் சாசனம் என்பது வெறும் ஆவணம் மட்டுமல்ல மக்கள் நலனுக்கான அடிப்படை ஆதாரம் என்று உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

அரசயில் சாசன சட்டத்தின் 75-வது ஆண்டையொட்டி நாடாளுமன்ற மாநிலங்களவையில் நடைபெற்ற விவாதங்களுக்கு பதிலளித்து பேசிய அவர், நாட்டின் ஜனநாயக வேர்களை வலுப்படுத்துவது அரசியல் சாசனம் என்று கூறினார்.

ஏழை மக்களின் நலனுக்கான திட்டங்களை வகுக்கவும், நாட்டை கட்டமைப்பதிலும் அரசியல் சாசனத்தின் பங்கு முக்கியமானது என்று அவர் தெரிவித்தார்.

பேச்சு சுதந்திரத்தை தடுப்பதற்கான முதலாவது அரசியல் சட்டத்திருத்தம் காங்கிரஸ் ஆட்சியின்போது கொண்டு வரப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், இதுபோன்ற பல்வேறு சட்டத்திருத்தங்களை அக்கட்சி கொண்டு வந்திருப்பதாகக் குறை கூறினார்.

கடந்த 16 ஆண்டுகளில் பிஜேபி ஆட்சியின்போது 22 முறை சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பபட்ட நிலையில் ஐந்து ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியில் 77 சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதாக திரு அமித்ஷா தெரிவித்தார்.

தேர்தல் தோல்விக்கு பயந்து மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களின் பதவிக்காலத்தை அதிகரிப்பதற்கான சட்டத்திருத்தத்தையும் காங்கிரஸ் கொண்டு வந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.,

ஆனால் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு ஜி எஸ் டி-யை அமல்படுத்தியது.. பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்துக்கு அரசியல் சட்ட அந்தஸ்து வழங்குவது, பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு பத்து சதவீது இடஒதுக்கீடு போன்றவற்றுக்காக சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதாக திரு அமித்ஷா பெருமிதம் தெரிவித்தார்.

முன்னதாக விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய அவை முன்னவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா, நாட்டு மக்கள் அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கக்கூடிய ஜனநாயக சுதந்திரம் வழங்கும் வகையிலான சூழ்நிலையை மத்திய அரசு ஏற்படுத்தி இருப்பதாகக் கூறினார்.

முந்தைய காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் அரசியல் சாசன சட்டம் சிதைக்கப்பட்டதாக திரு ஜெ பி நட்டா குற்றம்சாட்டினார்.

முன்னாள் பிரதமர் திரு எச் டி தேவேகவுடா, திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் திரு சுஷ்மிதான தேவ், திமுக-வின் திரு வில்சன், ஆகியோரும் இந்த விவாதத்தில் பங்கேற்று பேசினர்.

**[]<<<>>>[]**

பாதுகாப்பு தளவாடங்களை உற்பத்தி செய்யும் பொதுத்துறை நிறுவனங்கள் உலக தரத்திலான தொழில்நுட்பங்களை வழங்கக்கூடிய வகையில் நவீனப்படுத்தப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர்திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற பாதுகாப்புத்துறை ஆலோசனைக்குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

பாதுகாப்புத்துறையில் புதிய பொதுத்துறை நிறுவனங்களின் பங்களிப்பு மற்றும் செல்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பாதுகாப்பு தளவாட உற்பத்தித்துறையில் இந்தியா சுயசார்பை எட்டுவதற்கு இந்த நிறுவனங்களின் நவீனத்துவம் அவசியம் என்று திரு ராஜ்நாத்சிங் அப்போது தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாட்டின் கடலோர பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான திட்டங்களை மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வருவதாக உள்துறை இணை அமைச்சர் திரு நித்யானந்த ராய் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், கடலோர பாதுகாப்பு படையினருக்கான பயிற்சி, திறன் மேம்பாடு, அவர்களுக்கான நவீன திட்டங்கள் போன்றவை இவற்றில் அடங்கும் என்று தெரிவித்தார்.

கடல் எல்லை மற்றும் கடலோரப் பகுதிகளில் அச்சுறுத்தலை தடுப்பதற்காக 204 கடலோர காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கடலோர பாதுகாப்புப் படையின் தலைமை அலவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு தொடர் ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் திரு நித்யானந்தராய் தெரிவித்தார்.

[]<<<>>>[]

சீனா சென்றுள்ள தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல், இந்தியா – சீனா சிறப்பு பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்தையில் இன்று பங்கேற்கிறார்.

கிழக்கு லடாக் பகுதியில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட பதற்றத்தை தொடர்ந்து எல்லையில் தற்போது மீண்டும் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைனயை உருவாக்கும் நோக்கில் இந்த பேச்வார்த்தை நடைபெறவுள்ளது.

சீன தரப்பில அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு வாங் யீ பங்கேற்கிறார்.

கிழக்கு லடாக்கில் இரு நாடுகளின் ராணுவ ரோந்து பணிகளை மேற்கொள்வதுடன், படைகளை விலக்கிக் கொள்வதற்கான ஒப்பந்தம் கடந்த அக்டோபர் மாதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது,

அண்மையில் ரஷ்யாவின் கசான் நகரில் பிரதமர் திரு நரேந்திராமோடியும், சீன அதிபர் திரு ஜி ஜின் பிங்-கும் சந்தித்து பேசியதைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளது.

[]<<<>>>[]

தெலங்கானா மாநிலம் சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று ஹைதராபாத் அருகே உள்ள குடியரசுத் தலைவர் நிலையத்தில் பல்வேறு வசதிகளை தொடங்கி வைக்கிறார்.

இதற்காக நேற்று போலோரம் வந்தடைந்த குடியரசுத் தலைவரை அம்மாநில ஆளுநர் திரு ஜிஷ்ணு தேவ் வர்மா, முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி ஆகியோர் வரவேற்றனர்.

செகந்ராபாத்தில் உள்ள பாதுகாப்பு நிர்வாகவியல் கல்லூரியில் குடியரசுத் தலைவரின் கொடி வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்கும் திருமதி திரௌபதிமுர்மு, பல்வேறு திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

**[]<<<>>>[]**

ரயில்வே பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் மற்றும் பயணிகள் பாதுகாப்பு குறித்த ரயில்வே காவல்துறை ஐந்தாவது மாநாடு புதுதில்லியில் நேற்று நிறைவடைந்தது.

ரயில்வே பாதுகாப்புப் படையின் உயரதிகாரிகள், மூத்த அதிகாரிகள் பங்கேற்ற இந்த கூட்டத்தில் பேசிய ரயில்வே வாரிய தலைவர் திரு சதிஷ்குமார், ரயில்வே பாதுகாப்புப்படை மற்றும் ரயில்வே காவல்துறையினருக்கு இடையே ஒருங்கிணைந்த அணுகுமுறை அவசியம் என்று வலியுறுத்தினார்.

பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு இந்த நடைமுறை அவசியமாகிறது என்றும அவர் தெரிவித்தார்.

மகளிர் மற்றும் குழந்தைகளை பாதுகாப்பதில் ரயில்வே பாதுகாப்புப் படையினர் சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் திரு சதிஷ்குமார் குறிப்பிட்டார்,

**[]<<<>>>[]**

இந்தியா உட்பட 39 நாடுகள் இலங்கைக்கு விசா இல்லாமல் பயணம் செய்யலாம் என அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு விஜிதா கொராத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிபருடன் புதுதில்லி வந்துள்ள அவர், நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

விசா இல்லாமல் பயணம் செய்வதற்கான அதிகாரப்பூர்வ அறிவிக்கை அடுத்த மாதம் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேபோல் இலங்கை மக்களும் இந்தியாவுக்கு விசா இல்லாமல் வருவதற்கு வழிவகை செய்யப்பட்டிருப்பதாகவும் திரு வீஜிதோ கொராத் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

காஸாவில் நடைபெற்று வரும் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தை தீவிரமாக நடைபெற்று வருவதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தையில் பங்கேற்கும் இஸ்ரேல் குழுவினர் தோஹா சென்றடைந்துள்ள நிலையில் ஹமாஸ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக பிணைக் கைதிகளை முழுவதுமாக ஒப்படைப்பது குறித்தும் ஆலோசனை நடைபெற்றதகாவும், கத்தார் மற்றும் எகிப்து நாடுகளின் உதவியுடன் போர் நிறுத்த ஒப்பந்தம விரைலவில் எற்படும் என்றும் ஹமாஸ் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

அமெரிக்காவின் நீயு ஜெர்ஸியில் ஏராளமான ஆள் இல்லா விமானங்கள் பறந்த நிலையில் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏதும் இல்லை என்று பெண்டகன் தெரிவித்துள்ளது.

அமெரிக்க மக்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும் என்று பெண்டகன் செய்தி தொடர்பாளர் மேஜர் ஜெனரல் பாட் ரைடர் செய்தியாளர்களிடம் தெரிவீத்தார்.

ஆள் இல்லா விமானங்கள் அனைத்தும் வர்த்தக ரீதியிலும, பொழுது போக்கிற்காகவும் பறக்கவிடப்பட்டவை என்று அவர் தெளிவுபடுத்தினார்.

**[]<<<>>>[]**

நாட்டின் வட மாநிலங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கடும் குளிர் நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.,

இமாச்சல பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் குளிர்ந்த காற்று வீசும் என்றும் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

சர்வதேச பேட்மிண்டன் தர வரிசைப் பட்டியலில் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Treesa jolly** – காயத்ரி கோபிச்சந்த இணை 11-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

உலக பேட்மிண்டன் தொடரின் இறுதிப்போட்டியில் மலேசிய இணையை வென்றதன் மூலம் இந்த இணை தர வரிசையில் முன்னேறி இருப்பதாக நேற்று வெளியான பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் - ஷிராக் ஷெட்டி இணை ஒன்பதாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

ஒற்றையர் பிரிவைப் பொறுத்தவரை இந்தியாவின் லக்ஷயா சென் 12-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஐந்தாவது நாளான இன்று இந்தியா முதல் இன்னிங்ஸில் 260 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

பிரிஸ்பேனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆஸ்திரேலியா தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்க இருந்த நிலையில் மழை காரணமாக ஆட்டம் தடைபட்டுள்ளது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 445 ரன்

***END OF NEWS***